இரண்டும் என்னுடைய தொகுதியையும் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் தொகுதியையும் இணைக்கிற பாலங்கள். ஆகவே இந்த இரண்டு பாலங்களைக் கட்டவேண்டுமென்ற கோரிக்கைகள் நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அராய்ந்து பார்த்து ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வயதானவர்களுடைய சுமையை இளைஞர்கள் குறைக்கவேண்டுமென்று சொன்னார்கள். எனக்கிருக்கிற பயமெல்லாம், வயதானவர்கள் எங்கே இளைஞர்களுடைய இடத்தைப் பிடித்து விடுவார்களோ என்ற சந்தேகம்தான் இருந்து கொண்டிருக்கிறது. எனக்கு பக்கத்திலே இருக்கிற அருமை அண்ணன் இராகவானந்தம் அவர்கள் என்னைவிட துடிப்பாக காரியம் ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் என்னுடைய இடத்தைக் கூட அவர்கள் பிடித்து விடுவாரோ என்பதுதான் எனக்கு இருக்கிற சந்தேகம். இந்தப் பாலத்தைப் பற்றி வயதாகிவிட்டது என்று சொன்னீர்கள். வயதாகி இருந்தால் வாலிபப் பருவத்தை ஏற்படுத்த எந்த வகையிலே வலிவூட்ட வேண்டுமோ அவற்றைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் மேலும் இது ஒரு முக்கியமான பாலம். அந்தப் பாலத்தை பொறுத்தவரையில் மிக எச்சரிக்கையாக நெடுஞ் சாலைத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) பி. பார்மசி பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு, பதவி உயர்வு.

திரு. வி. வி. சுவாமிநாதன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் அரசு தனி பார்மசி பட்டப்படிப்புக் கல்லூரி ஏற்படுத்தாமல் எம். பார்மசி போன்ற பட்டப் படிப்பும் துவக்காமல் இருப்பதால் தமிழ்நாட்டில் பி. பார்மசி பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாததோடு பதவி உயர்வுபெறவும் வழி இல்லாதிருக்கும் நிலைமை குறித்த'' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை மருத்துவக் கல்லூரியில் 25 இடங்களும் மதுரை மருத்துவக் கல்லூரியில் 31 இடங்களும் கொண்ட பி. பார்மசி பட்டப்படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. மேலும் மதுரை மருத்துவக் கல்லூரியில் 3 இடங்கள் கொண்ட எம். பார்மசி (முதுநிலை பட்டப்படிப்பு) இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் பார்மசி பட்டப் படிப்பிற்கென அரசு தனிக்கல்லூரி ஒன்றை ஏற்படுத்தாததினால், பி. பார்மசி பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லையென்றோ பதவி உயர்வு பெறவும் வழி இல்லையென்றோ கூறுவதற்கு இடம் இல்லை.

1982 ஏப்ரல் 7]

திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, மராட்டிய மாநிலம் குஜராத்மாநிலம் ஆகியவற்றை ஒப்பிடுகிறபொழுது மருந்து உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில மிகமிகக் குறைவாகும். 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு பி. பார்மசி வகுப்பு துவக்கப்பட்ட பல்வேறு மாநிலங்களில். குறிப்பாக, பஞ்சாபில் உள்ள சண்டிகாரிலும், ஆந்திராவிலுள்ள வால்டேரிலும், கர்நாடகத்தில் உள்ள பெங்களூரிலும். இராஜஸ்தானிலுள்ள பிளனியிலும், உத்தரப் பிரதேசத்தில் உள்ள பெனாரசிலும், மத்திய பிரதேசத்திலுள்ள சாகரிலும், மராட்டியத்தில் நாக்பூரிலும்கூட, தனி பி. பார்மசி கல்லூரி ஆரம்பித்து எம். பார்மசு வகுப்புகள் துவக்கப்பட்டிருக்கின்றன. அது மாத்திரமல்லாமல், 6 வருடங்களுக்கு முன்பு துவக்கப்பட்ட கோவாவிலும், பம்பாயிலே சுலினாவிலும் எம். பார்மசி பட்டப் படிப்புக்காகக் கல்லூரி துவக்கப்பட்டிருக்கிறது. கால் நூற்றாண்டுக்கு மேலாகிறது இங்கு பி. பார்மசி வகுப்புகள் துவக்கப்பட்டு. குறிப்பாக, தமிழ்நாட்டின் தலைநகரில்தான் மருந்து உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தச் சூழ்நிலையை உத்தேசித்து, எம். பார்மசி பாட திட்டங்களையும் வகுப்புகளையும் மெட்ராஸ் மெடிக்கல் காலேஜில் நடத்த சென்னைப் பல்கலைக் கழகம் அனுமதித்திருக்கிறதா? அப்படி அனுமதி அளித்தும் நடத்த முடியாமைக்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மேல்பட்டப் படிப்புக் கல்லூரி ஒன்று இல்லையென்றுதான் சொன்னேன். எம். எம். சி. யிலே இப்பொழுது பி. பார்மசி வகுப்பு நடந்து வருகிறது. அந்த பி. பார்மசியை எம். பார்மசியாக உயர்த்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதற்காக நான் சில முறைகளை எல்லாம் வகுத்து, ஆணையிடுவதற்கு முன்பாக, இன்ஃப்ராஸ்டிரக்ச்சர் என்று சொல்லக்கூடிய பேசிக்காக என்ன,என்ன தேவைப் படுகிறதோ, அவைகளை எல்லாம் ஏற்படுத்தி அந்தக் குறிப்புகளை சென்னை பல்கலைக் கழகத்திற்கு அனுப்ப இருக்கிறோம். அதை அனுப்பிய பிறகு அவர்களுடைய ஒப்புதல் வாங்கி, நிச்சயமாகத் துவக்கக்கூடிய ஒரு உத்தேசம் இருக்கிறது. அதை மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் ஏற்கனவே ஒரு கூட்டத்தில் சொன்னார்கள். அப்பொழுது நாம் வாக்குறுதி கொடுத்தோம், உடனடியாகத் துவங்க ஏற்பாடு செய்கிறோம் என்று. அந்த வாக்குறுதி நிச்சயமாகக் காப்பாற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம் பார்மசி பட்டப் படிப்பில்லாததால் தமிழ்நாட்டில் மதுரையில் மட்டும் 3 இடங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அது தனியாரால் துவங்கப்பட்ட கல்லூரி.

அங்கு வைத்திருக்கிற 3 இடங்கள் கூட அந்தக் கல்லூரியில் வேலை செய்பவர்களுக்கு மாத்திரம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தனிப்பட்ட மாணவர்கள் அங்கு படிக்க முடியாது. குறிப்பாக, ஏழைகள் எம். பார்மசி படிக்க முடியாது. இதனால் செல்வம் உள்ளவர்கள் பிற மாநிலங்களுக்குச் சென்று எம். பார்மசி படிக்கிறார்கள். மருந்து தொழிற்சாலைகளில் எம். பார்மசி பட்டம் தேவை என்று வைத்திருப்பதால், பிற மாநிலங்களில் எம். பார்மசி படித்த பட்டதாரிகள் இங்கு வருகிறார்கள்.

அமைச்சர் அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டமோ அல்லது பதவி உயர்வு இல்லையென்ற பிரச்னையோ இல்லையென்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் டிரக் இன்ஸ்பெக்டர்களாக இருப்பவர்கள் அசிஸ்டெண்ட் டிரக் கன்ட்ரோலர்கள் பதவி பெறுவதற்கு எம். பார்மசி குறைந்தபட்சத் தகுதியாகும். ஆகவே, எம். பார்மசி பாடத்தை, புகழ்பெற்ற தமிழ்நாட்டில் துவக்குவதற்கு விரைவில் அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரியாக அதைச் செய்ய இருக்கிறோம். இந்தக் குறைகூட என்னிடத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக எம். பார்மசி தேவைப்படுகிறது என்பதை நானும் உணர்ந்திருக்கிறேன். ஆகவே, வெகு விரைவில் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 33/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

அச்சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று மாண்புமிகு பேரவை முன்னவர் கோருவார்.